1968 பிப்ரவரி 16]

மேற்கு மாம்பலத்துக்கு விளக்கு வசதி

* 58 வினா.—**திரு. வை. சுவாமிநாதன்** : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சென்னை மேற்கு மாம்பலம், 96-வது டிவிஷனில் இன்னும் விளக்கு வசதிகள் செய்து கொடுக்காமல் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அது பற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை, மேற்கு மாம்பலத்தில் விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தற்போது 500 விளக்குகள் உள்ளன.

(இ) எழாது.

திரு. வை. சுவாமிநாதன் : 96-வது வட்டத்தில் இன்னும் சில பகுதிகளில் விளக்கு வசதி செய்யப்படாமல் இருக்கிறது. சில இடங்களில் சோழர்கால விளக்குகள் கூட எரிந்து கொண்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தற்போது 500 விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவ்வப்போது வட்டார உறுப்பினரும், பொதுமக்களும் கேட்பதற்கு ஏற்ப, மாநகராட்சியின் நிதிநிலைமையை ஒட்டி விளக்குவசதிகள் அதிகரிக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : மேற்படி டிவிஷனில் வீட்டு வசதி போர்டாரால் கட்டப்பட்டிருக்கும் பகுதிகள் ஏராளமாக இருக்கின்றன. நீண்ட நாட்களாகவும், மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் கோடம்பாக்கம்-புதூர் என்ற பகுதியில் இருப்பவர்கள் இன்னும் இருளில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, விளக்கு வசதி செய்து கொடுக்கும் பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் மாநகராட்சிக்கு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : விளக்கு வசதிகள் இல்லாத பகுதிகளுக்கு விளக்கு வசதிகள் செய்து கொடுக்க விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவ்வப்போது நிச்சயமாக அறிவிக்கப்படும்.

திரு. கே. விநாயகம் : மேற்கு மாம்பலத்திலே இன்னும் தனிப்பட்ட கண்டிராக்டர்களுக்கு ஒப்பந்தம் செய்ததன் காரணமாக அங்கெல்லாம் சாதாரண விளக்குகளே வீதிகளில் எரிவது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், மற்றவர்களுக்கும் தெரியும். புதிய மாம்பலம் பகுதியில் நியான் விளக்குகளும், ப்ளு வேபர் விளக்குகளும் இருக்க இந்த மேற்கு மாம்பலம் பகுதியில் உள்ளவர்களுக்கு அந்த மாதிரி விளக்குகள் இல்லாமல் இருப்பது பாகுபாடு காட்டுவதாக இருக்கும் என்ற காரணத்தால் அரசாங்கம் இந்நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கார்ப்பரேஷனுக்கு அதிகாரபூர்வமாகச் சொல்ல முடியுமா ?

[1968 பிப்ரவரி 16

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: சென்னப்ப நாயக்கன் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியில் மட்டுந்தான் முதலில் விளக்குகள் இருந்தன; மற்றப் பகுதிகள் இருளில்தான் இருந்தன. படிப்படியாகத்தான் மற்றப் பகுதிகள் விளக்கு வசதிகளைப் பெற்றன. அதே போன்று இப்போது புதிதாகத் தோன்றி யிருக்கும் மேற்கு மாம்பலம் பகுதியிலும் ஒளி விளக்குகள் அமைக் கப்படும்.

DR. H. V. HANDE: Yesterday I had to say that West Mambalam was the Cindrella of Madras City. To-day I have to say that there is more no-man's land in West Mambalam, belonging neither to the State Housing Board nor to the Corporation. There are a number of private roads. Neither the Housing Board nor the Corporation want to come into the picture and put up electric lights. In view of this confused picture, will the Hon. Minister take steps to have the streets properly lighted and will he give per instructions to the Corporation?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தொடர்புடைய மாநக ராட்சி மன்ற அதிகாரிகளை அழைத்து வைத்து அது பற்றிப் பேசு வதாக எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

திரு. கே. விநயகம்: இந்தப் பகுதியில் அதிகமான பிரைவேட் ரோடுகள் இருப்பதால் அதிலே வசிக்கின்ற மக்கள் எல்லாம் சேர்ந்து எங்களுடைய சொந்தத் தன்மையை விட்டுக் கொடுக் கிறோம் என்று எழுதிக் கொடுத்தாலொழிய கார்ப்பரேஷன் அதாரிடிஸ் ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால், கார்ப்பரேஷன் அந்த மக்களை அணுகி நயமாக அவர்களிடமிருந்து எழுதி வாங்க முயற்சி செய்தால் முடியும். அல்லது சட்ட மன்றத்தில் சட்டம் கொண்டு வந்து பிரைவேட் ரோடுகள் தானகவே ஸ்தல ஸ்தாபனங் களிடத்தில் ஒப்படைக்கப்பட்டு விட்டதாக கருத வழி செய்ய வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தனிப்பட்டவர்கள் இடத்தை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டுமென்று உறுப் பினர் அவர்கள் நயமாக எடுத்துச் சொல்லி அந்த முயற்சியில் தோல்வி கண்டால் பிறகு அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடி வடைந்தன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அவையுரிமைக் கேள்வி.

திரு. சுப்ரமணியம் மீதும், 'இந்து' பத்திரிகை மீதும்
(தொடர்ச்சி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. இளம்வழுதி அவர்கள் கொண்டு வந்துள்ள அவை உரிமைக் கேள்வி. அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தில் கண்டுள்ளபடி